**துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலை செயற்திட்டம் - 2022**

---

துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3716 - எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் உறுப்புரை II பிரிவு 2.09 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன்னாள் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. செயற்திட்டமானது துறைமுகம் மற்றும் முன்மொழியப்பட்ட பலதரப்பட்ட போக்குவரத்து மையத்தினூடாக புதிய களனி பாலம் தொடக்கம் காலி முகத்திடல் வரை 04 பாதைகளைக் கொண்ட 5.3 கி.மீ நீளமான மேம்பால நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதற்காக உள்ளது. பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் பிராந்திய ஒருங்கிணைவு என்பவற்றில் சாதகமான விளைவினை கொண்டிருப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கொழும்பு நகரத்தில் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குவதனை வகுத்தல், கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கான பயண நேரத்தினை குறைத்தல் மற்றும் துறைமுகத்திலிருந்து கொழும்பின் ஏனைய பிராந்தியங்களிற்கான போக்குவரத்தின் போது போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல் என்பன எதிர்பார்க்கப்படும் நன்மைகளாகும். கொழும்பு நெடுஞ்சலையில் கொள்கலன்களின் நகர்வில் எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சி காரணமாக கொழும்பின் புறநகரங்களிலுள்ள போக்குவரத்து நெரிசலும் எளிதாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 56,815.2 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 360 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 47,346 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 300 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி ரூபா 9,469.2 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பட்டிருந்தது.

2016 பெப்ரவரியில் செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை ஆரம்பித்திருந்ததுடன் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் 2016 மார்ச்சில் பெறப்பட்டது. செயற்திட்டமானது 2025 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான ரூபா 1,904,332 தொகையான பெறுமானத்தேய்வு பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசல்லாத அசைவாக சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. | 1,904,332 | ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>2023 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

| | கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | |
| (அ) | துறைமுக நுழைவு உயர்த்திய நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள். | நிர்மாணம் | 87 | 54 | செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதை பாதகமாக பாதிக்கின்றது. | ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் மற்றும் நாட்டில் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை. |

**முகாமைத்துவத்தின் பதில்** 86.7% இற்கு எதிராக 54.3% செயன்முன்னேற்றம் அடைந்துகொள்ளப்பட்டது. P79 இலிருந்து P85 (SLPA பிரதான களஞ்சியங்கள் மற்றும் பணிமனை பகுதி) வரையிலான பிரிவை பெற்றுக்கொள்வதில் உள்ள தாமதம் இந்த தாமதத்திற்கு முக்கியமாக பங்களித்தது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** மேலதிக கிரயத்தை குறைக்கும் வகையில் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | கடல்சார் வசதி நிர்மாணம் மையத்தின் நிர்மாணம். | 69 | 22 | செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதை பாதகமாக பாதிக்கின்றது. | பெறுகை செயன்முறையில் உள்ள தாமதம், ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல், நாட்டில் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை. |

**முகாமைத்துவத்தின் பதில்** தற்போதைய செயன்முன்னேற்றம் 27% இற்கு அதிகமாக உள்ளது. எனினும், உலகளாவிய பணவீக்கத்தின் காரணமாக ஒப்பந்ததாரர் கடுமையான காசுப்பாய்ச்சல் சிக்கல்களை எதிர்கொள்வதால், இந்த சூழ்நிலையை சமாளிப்பதற்கு ஐ.அ.டொலரில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு அவர் பணம் செலுத்துமாறு கோரியுள்ளார்.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** காலதாமதத்தை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து, மேலதிக கிரயங்களை தவிர்ப்பதற்கு ஒப்பந்த பணிகளை இலக்கு திகதிக்குள் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட செயற்பாட்டின் முன்னேற்றம் மற்றும் விளைவுகளை அளவிடுவதற்கு முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் நிறுவப்பட்டிருக்கவில்லை. | செயன்முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காக முக்கியமான பணி உருப்படிகளின் அளவுகளையும் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றத்தையும் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகளாக நாங்கள் பயன்படுத்துகிறோம். | ”சிமார்ட்” கேபிஐகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு துறைமுக நுழைவு உயர்த்திய நெடுஞ்சாலையின் சிவில் பணிகளுக்கான ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் 54 சதவீதமாக இருந்த போதிலும், நிதி செயன்முன்னேற்றம் ரூபா 23,430.34 மில்லியன் தொகையாக இருந்தது, இது ரூபா 28,002 மில்லியன் மொத்தக் கிரய மதிப்பீட்டில் 83 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மேலும் ஆலோசகரின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் விலை வேறுபாடுகள் காரணமாக, ஆரம்ப ஒப்பந்தத் தொகையில் 81 சதவீதத்தால் ரூபா 50.8 பில்லியன் வரை பணிகளின் மதிப்பீடு அதிகரிக்கப்படும். சிவில் பணிகளின் மெதுவான முன்னேற்றம் அந்த செலவினம் அதிகரிப்பதை பிரதானமாக பாதித்திருந்தது. | கொவிட் தொற்றுநோய், அடையாளம் காணப்படாத பயன்பாடுகள், பொருளாதார நெருக்கடி மற்றும் தொடர்புடைய பொருள் பற்றாக்குறை போன்றன மெதுவான முன்னேற்றத்திற்கு பங்களித்த காரணிகளாகும். அந்த காரணிகள் கூட சமர்ப்பிக்கப்படவில்லை;<br>SLPA வசமுள்ள தாமதம் காரணமாக செயற்திட்டத்தை சரியான நேரத்தில் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | காலதாமதங்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து, மேலதிக கிரயங்களை தவிர்ப்பதற்கு ஒப்பந்த பணிகளை இலக்கு திகதிக்குள் பூர்த்தி செய்வதற்கு உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலத்திரனியல் கட்டண சேகரிப்பு முறைமைக்கான செயற்திட்ட முகாமைத்துவ ஆலோசகரின் ஆலோசனை சேவைகள் தொடர்பான முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதம் 2023 பெப்ரவரி 28 இல் காலாவதியாகியிருந்தது. எனினும், ரூபா 3.8 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 2023 மார்ச் 31 வரையிலும் செயற்திட்டத்தால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முற்பண உத்தரவாதம் காலாவதியாவதற்கு முன்னர் முற்பணக் கொடுப்பனவை அறவிடுவதற்குப் போதுமான தொகையுடன் ஆலோசகரின் விலைப்பட்டியல்கள் பிஎம்யூ இல் காணப்பட்டன. | முற்பணக் கொடுப்பனவை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆலோசகர் துறைமுக நுழைவு உயர்த்திய நெடுஞ்சாலை ஒப்பந்ததாரருக்கு, பணியை வடிவமைத்தல் மற்றும் பணிகளை விரைவுபடுத்துதல் தொடர்பான சிக்கல்களைச் சமாளிப்பதற்கு தகுதிவாய்ந்த உள்ளூர் அடிப்படையிலான நெடுஞ்சாலை வடிவமைப்பு பொறியியலாளர்/ நெடுஞ்சாலைப் பொறியியலாளரை நேரடியாக பணியிலீடுபடுத்துமாறு அறிவுறுத்தியிருந்த போதிலும், ஒப்பந்ததாரரால் பணியிலீடுபடுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. குறிப்பாக வீதி தளபாட உருப்படிகளுக்கு, முன்னர் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்புக்களின் அகற்றப்பட்ட பதிப்புக்களை மீண்டும் சமர்ப்பிப்பது உட்பட, தரம் குறைந்த வடிவமைப்புக்களை தொடர்ந்து சமர்ப்பித்து வந்தார். ஆலோசகரின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் இந்த சமர்ப்பிப்புக்கள் இலங்கை நடைமுறைகள் அல்லது பொருந்தக்கூடிய நியமங்கள் (தேசிய மற்றும் சர்வதேச) ஆகியவற்றுடன் இணங்கியிருக்கவில்லை என்பதாலும், ஒப்பந்ததாரர் பல முக்கியமான வடிவமைப்பு கூறுகளை சமர்ப்பிப்பதை தாமதப்படுத்தியிருந்ததாலும் இது ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாக மாறியுள்ளது. நான்காவது திருத்தப்பட்ட வடிவமைப்புத் திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்ததாரர் 07 கேப்பிங் பீம் (capping beam) | ஆலோசகர் (பொறியியலாளர்) ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களின் பிரகாரம் வடிவமைப்புக்கள் பூர்த்தி செய்யப்படுகின்றதை உறுதிப்படுத்துகிறார். | கால எல்லைக்குள் பணிகளை பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை பணிகள் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வடிவமைப்புக்களையும் 06 அடுக்கு வடிவமைப்புக்களையும் 2022 திசெம்பர் 31 வரை சமர்ப்பிக்கத் தவறியிருந்தார். | | |
| (உ) | கடல்சார் வசதி மைய கட்டிடத்தை பூர்த்திசெய்து இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையிடம் கையளிப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் (SLPA) தற்போதுள்ள பதவியணியினரை வாடகைக்கு விடப்பட்ட கட்டிடங்களுக்கு இந்த செயற்திட்டம் திரட்டியிருந்தது. இது தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 195.47 மில்லியன் மொத்தத் தொகையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 116.9 மில்லியன் தொகையை செயற்திட்டம் செலுத்தியிருந்தது. | SLPA கட்டிடங்களில் வசிப்பவர்களின் முன்கூட்டிய இடமாற்றம் காரணமாக, வேலைத்தளத்தை கையகப்படுத்துவதில் உள்ள கணிசமான தாமதம் தவிர்க்கப்பட முடிந்திருந்தது, எனவே PAEH நிர்மாணத்தின் முன்னேற்றம் பேணப்பட முடிந்திருந்தது. | மேலதிக கிரயங்களை இழிவுபடுத்துவதற்கு நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ஒப்பந்ததாரர் தனது கிரயத்தில் கள ஆய்வுகூடத்திற்கு தேவையான அனைத்து உபகரணங்களையும் வழங்க வேண்டியதுடன் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் போது கள ஆய்வுகூட உபகரணங்கள் ஒப்பந்ததாரருக்கு மாற்றப்பட்டு ஒப்பந்தத்தின் இறுதியில் ஒப்பந்தத்திற்கான விபரக்குறிப்புகளின் 108.4 மற்றும் 120.7 துணை உட்பிரிவுகளின் பிரகாரம் அளவை உபகரணம் ஒப்பந்ததாரரிற்கு மீளளிக்கப்பட்டு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கள ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் அளவை உபகரணங்களுக்காக ரூபா 14.21 மில்லியன் தொகையை செயற்திட்டம் மொத்தமாகச் செலுத்தியிருந்தது. அதன் பிரகாரம் அசாதாரண ஒப்பந்த நிலைமைகள் ஒப்பந்ததாரருக்கான தேவையற்ற நன்மைகளிற்கு வழிவகுக்கலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்தத்தின் இறுதியில் அந்த உருப்படிகள் RDA இன் ஆதனமாக மாறினால், ஒப்பந்ததாரர் மிக அதிக விலையை கோரலாம், இறுதியாக, RDA இற்கு எந்தவொரு நன்மையும் காணப்படவில்லை. | ஒப்பந்ததாரர்களுக்கான தேவையற்ற நலன்களை குறைப்பதற்கு உறுதியான ஒப்பந்த நிபந்தனைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | போதியளவு கடன் நிதிகள் காணப்படாதமை காரணமாக ஐ.அ.டொலர் 28.4 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியை கொண்டிருந்த இலத்திரனியல் கட்டண சேகரிப்பு முறைமையை (ETC) நடைமுறைப்படுத்துவதை இரத்துச் செய்வதற்கு 2023 பெப்ரவரி 02 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணக்கப்பாடு செயற்திட்டத்தால் கோரப்பட்டிருந்தது. எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ETC முறைமைக்கான செயற்திட்ட முகாமைத்துவ ஆலோசகருக்கான ஆலோசனை சேவைகளுக்காக செயற்திட்டம் ரூபா 161.69 மில்லியனைச் செலுத்தியுள்ளது. அதன் பிரகாரம், ETC முறைமை இரத்து செய்யப்பட்டதன் காரணமாக, மேற்படி செலவினம் செயற்திட்டத்திற்கு ஒரு பயனற்ற செலவினமாக இருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் ETC முறைமையை அமுல்ப்படுத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்படும் போது, விபரக்குறிப்புக்கள் மற்றும் வடிவமைப்புக்கள் பயன்படுத்தப்படலாம். மாற்று நடைமுறையின் அடிப்படையில் அதிவேகப்பாதை வலையமைப்பிற்கான ETC முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு, ADB இன் தொழில்நுட்ப உதவியின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | செயற்திட்ட செயற்பாடுகளை செயற்திறனாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆகஸ்டில் 270 நாட்கள் ஒப்பந்த காலப்பகுதிக்கு ரூபா 1,090.08 மில்லியன் ஒப்பந்த விலையில் பணிமனை கட்டிட வளாகத்தின் நிர்மாணம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், அது தாமதமாகியிருந்ததுடன் 04 கட்டிடங்களின் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றம் 2023 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு 87 சதவீதமாக இருந்தது, மேலும் 2023 மே மாதத்திலும் மேம்பால நெடுஞ்சாலையின் ஒப்பந்ததாரரிடம் தொடர்புடைய இடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மேம்பால நெடுஞ்சாலை நிர்மாணம் மேலும் தாமதமாகி 2024 யூன் வரை நிர்மாணக் காலப்பகுதி நீடிக்கப்படலாம். | இது ADB மற்றும் செயற்திட்ட மட்ட மற்றும் அமைச்சர்கள் மட்ட அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. | உரிய காலத்தில் பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | துறைமுக வழி மேம்பால நெடுஞ்சாலைக்கான நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனை சேவையின் குறிப்பு விதிமுறைகளின் (TOR) பிரகாரம் ஆலோசகரின் சர்வதேச மற்றும் தேசிய | தொழில்தருநராக RDA இன் கடமைகளை நிறைவேற்றும் போதும் RDA இன் நலன்களைப் பாதுகாக்கும் போதும் RDA | தனிப்பட்ட ஆலோசகர்களை ஆட்சேர்ப்பு செய்யாமல் ஆலோசனை சேவையை முகாமை செய்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணியினர் முக்கிய பதவிநிலைகளுடன் 55 பதவியணியினரை உள்ளடக்கியுள்ளது. எனினும், அந்த ஆலோசனை சேவைக்கு மேலதிகமாக செயற்திட்டத்தினால் 02 தனிப்பட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13.9 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. இது கணக்காய்வின் போது பிரச்சினைக்குரிய விடயமொன்றாக இருந்தது. | இன் செயற்திட்ட பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதற்கு இரண்டு தனிப்பட்ட ஆலோசனை ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. | வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன்னர் 2022 ஆம் ஆண்டிற்கான நிதி அதிகாரக் கையளிப்பின் பிரகாரம் பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு மேலதிக செயலாளர் (நிர்வாகம்) அல்லது பிரதம நிதி அதிகாரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும், 2022 ஆம் ஆண்டில் ரூபா 2,092,925 பெறுமதியிலான மூலதன சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு அத்தகைய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது, இந்த ஆண்டு முதல் பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்படும். | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றுதல். |
| (உ) | சிவில் வேலைகளின் மெதுவான செயன்முன்னேற்றம் காரணமாக 2022 ஆம் ஆண்டுக்கான ரூபா 100 மில்லியன் GOSL ஒதுக்கீட்டில் செயற்திட்டமானது ரூபா 20.67 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியிருந்ததுடன் ஒதுக்கீட்டில் 79 சதவீதம் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் வெளிநாட்டு நிதி ஒதுக்கீட்டில் 77 சதவீதம் மற்றும் 73 சதவீதம் முறையே 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனின் வழங்கப்படாத பெறுவனவுகளில் ரூபா 322.41 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணங்கள் கடனளிக்கும் முகவரிற்கு சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கொவிட் தொற்றுநோயால் ஏற்பட்ட தாமதங்கள், பயன்பாட்டு மாற்றங்கள் மற்றும் துறைமுக நுழைவு அனுமதிச்சீட்டுக்களை வழங்குவதில் தாமதம் போன்ற காரணங்களால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கடன் நிதிகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |